த்தியாவசியமான 10. 15 பொருட்களுக்காவது விலைப் ட்டியயல் போடச் சொல்லி, அது அமுல்செய்யப்படுமா? டைகளில் இருப்பு சரியாக இருக்கிறதா, சரியான விலைக்கு ற்கிறார்களா என்பதைக் கண்காணிக்க ஒரு உஷார் குழுவை ிதாக அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? ஒவ்வொரு மாவட் த்திலும் இந்தக் குழுவை அமைக்க அரசு முன்வருமா என்று றிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் லைவரவர்களே, 1977ஆம் ஆண்டு சட்டப்படி 37 இன்றியமை ாத பண்டங்களைக் குறிப்பிட்டு, அவற்றின விலைகளை ட்டாயம் குறித்து வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக் றோம். அது இப்போதும் தொடர்ந்து நடைமுறையில் இருக் ன்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று ங்காவது தவறுகளோ அல்லது கண்காணிப்போ சரியாக ல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருந்தால் அதுபற்றி தீவிரமாக டவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ற்றவர்களும் முயற்சி செய்வார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு துபற்றி சொல்லியிருக்கிறோம். இந்த மாமன்றத்தில் நடை பெறும் விவாதமே அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுக்க ாக்கம் தருவதாக இருக்கும் என்று கருதுகிறேன். மேலும் ாண்புமிகு உறுப்பினர்களும் இப்படிப்பட்ட தீவிர நடவடிக்கை ளுக்கு உறுதுணையாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று ருதுகிறேன்.

கன்னியாகுமரியில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 948—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு தி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரியில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தாழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது தொழிற்சாலை அமைக்கப் டும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.
(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

குமரி மாவட்டத்திலுள்ள நீர்த்தேக்கங்களில் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு.

* வினா எண். 949—திரு. டி. மணி: மாண்புமிகு நிதி அமைச்சர் ழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, ற்றார் நீர்த்தேக்கங்களில் 1979—80, 1980—81 ஆண்டில் த்தனை டன் மீன் பிடிக்கப்பட்டது?